செ.வெ.எண்: 554 நாள்: 29.09.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**
**02.10.2021-ஆம் தேதியன்று தேர்தல் நன்னடத்தை விதிகள்**
**நடைமுறையில் உள்ள கிராம ஊராட்சிகள் தவிர**
**ஏனைய கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக்கூட்டம் நடைபெற உள்ளது.**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

மகாத்மா காந்தி பிறந்த தினமான 02.10.2021-ஆம் தேதியன்று காலை 11 மணிக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் ஊரக உள்ளாட்சி தற்செயல் தேர்தல் 2021 தேர்தல் நன்னடத்தை விதிகள் (Model Code of Conduct) நடைமுறையில் உள்ள கிராம ஊராட்சிகள் தவிர ஏனைய கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக்கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல், கொரோனா பெருந்தொற்று குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்ததுல் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல், ஊரகப் பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், குடிநீர் சிக்கனமாக பயன்படுத்துதல், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், ஊராட்சிப் பகுதிகளில் நடைப்பெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகளின் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள், மக்கள் திட்டமிடல் இயக்கம் (People's plan campaign), ஊட்டச்சத்து இயக்கம் (POSHAN Abhiyaan), வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், தற்போது உள்ள பணிகளின் தொகுப்பின் முன்னேற்றத்தினை பகிர்ந்து கொள்ளுதல், 2021-22-ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்ட பணிகளின் முன்னேற்ற நிலை, தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) தொகுதி II-இல் (2020-21 முதல் 2024-25 வரை), கழிப்பறை கட்டி பயன்படுத்தும் குடும்பங்களுக்கு பாராட்டு தெரிவித்தல், திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையை தக்க வைத்தல், திடக்கழிவு மேலாண்மை திட்டம், நெகிழிக்கு மாற்று பொருட்கள் பயன்படுத்துவதை ஊக்குவித்தல், திரவக் கழிவு மேலாண்மை திட்டம், விரிவான கிராம சுகாதார திட்டம், தூய்மை கணக்கெடுப்பு ஊரகம்-2021 குறித்து பொதுமக்களுக்கு தெரிவித்தல், மின்சிக்கனத்தைக் கடைப்பிடித்தல் - மின் சிக்கனம் தேவை இக்கணம், ஜல் ஜீவன் திட்டம் உள்ளிட்ட பொருட்கள் விவாதிக்கப்பட உள்ளன.

மேற்குறிப்பிட்டுள்ள அரசின் திட்டங்கள் மற்றும் ஊராட்சியின் செயல்பாடுகள் பற்றிய விபரங்களை தெரிந்து கொண்டு பயன்பெறும் வகையில் பொதுமக்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சார்ந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் என அனைவரும் அரசு அறிவித்துள்ள கொரோனா தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி, அதிக அளவில் கலந்துகொண்டு கிராம சபைக் கூட்டத்தை சிறப்பித்திட கேட்டுக்கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

-----------------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**